சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் – 2011– 2012 ஆம் ஆண்டில் பகுதி II திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் குடியிருப்பு பகுதிகளில் 10 சமுதாயக் கூடங்கள் ரூ.100.00 இலட்சம் செலவில் கட்ட ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந 5)துறை

அரசாணை (நிலை) எண். 108 நாள் : 11.11..2011

படிக்க

ஆணையர், ஆதிதிராவிடர் நலம் அவர்களின் கடித
எண். எச்.1 / 8515/2011, நாள் 21.9.2011.

-----

ஆணை:-

2011 – 2012 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அதிகமாக வசிக்கும் குடியிருப்பு பகுதிகளில் ரூ.100.00இலட்சம் செலவில் 10 சமுதாயக் கூடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. 2011 – 2012ஆம் ஆண்டில் தலா ரூ.10.00 இலட்சம் வீதம் 10 சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்கு ரூ.100.00 இலட்சம் (ரூபாய் நூறு இலட்சம் மட்டும் ) பகுதி II திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும், சமுதாயக் கூடங்கள் கட்டும் பணியினை வழக்கம்போல் தாட்கோவிடம் ஒப்படைக்கலாம் எனவும் மேற்கண்ட தொகையினை பெற்று தாட்கோவிடம் வழங்க ஆதிதிராவிட நல ஆணையர் கோரியுள்ளார்.

3. ஆதிதிராவிட நல ஆணையரின் கோரிக்கையினை ஏற்று, அரசு 2011– 2012 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் குடியிருப்பு பகுதிகளில் 10 சமுதாயக் கூடங்கள் கட்ட ரூ.1,00,00,000/– (ரூபாய் ஒரு கோடி மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> 4225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு – 01 – ஆதிதிராவிடர் நலன் – 800 – ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் II மாநில திட்டம் – JA சமுதாய நலக் கூடங்கள் கட்டுதல் –16– பெரும்பணிகள்.
> (து.தொ.கு.4225 01 800 JA 1602)

5. பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தைக் கொண்டு இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 10 இடங்களில் சமுதாயக் கூடங்கள் கட்டப்பட வேண்டும். இத்தொகையினைப் பெற்று கட்டுமானப் பணியினை தாட்கோ மேலாண்மை இயக்குநரிடம் ஒப்படைக்க ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். பகுதி II திட்டங்களுக்கென ஒப்பளித்த தொகையினை மேற்கண்ட திட்டங்களுக்கு மட்டுமே செலவிடப்பட வேண்டும். இத்திட்ட செலவினம் போக மீதித்தொகை இருப்பின் அத்தொகையை அரசு கணக்கில் உடனடியாக ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும். கட்டுமானப் பணிகளை, குறித்த காலவரம்பிற்குள் முடிக்க, கால அட்டவணை ஒன்றினை தாட்கோ நிறுவன மேலாண்மை இயக்குநருடன் கலந்து தயார் செய்யும்படி ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். கட்டட கட்டுமானப் பணியின் முன்னேற்றத்தினைக் கண்காணிக்கவும், குறிப்பிட்ட காலவரம்பிற்குள் கட்டிடங்களை கட்டி முடித்து ஆதிதிராவிடர் நலத்துறையிடம் தாட்கோ ஒப்படைப்பதை உறுதி செய்யும்படியும் ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், முன்னேற்ற அறிக்கை மாதந்தோறும் அரசுக்கு அனுப்பப்படவேண்டும். கட்டுமானப் பணிகள் ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடங்களுடன் ஒத்திருப்பதையும், அவற்றின் தரத்தினையும் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் தாட்கோ மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 78/11 நாள்: 11.11.2011 இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ஆ.சு. ஜீவரத்தினம்,
அரசு செயலாளர்.

பெறுநர்
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை– 5,
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை – 101,
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை – 18/6/9/35
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்,
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்,
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–8
நகல்:
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் செயலர்
அவர்களின் தனிச் செயலர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (ஆதிந 6 /கமபா/சிஉதி/அநமு 1) துறை, சென்னை – 9
நிதி (ஆதி(ம) ப.ந) மற்றும் நிதி (வ.செ.பொ2) துறை, சென்னை – 9
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## 2011 – 2012 ஆம் ஆண்டு சமுதாயக் கூடங்கள் கட்ட பரிந்துரைக்கப்படும் மாவட்டங்கள்

| வ. எண் | மாவட்டம் | கிராமத்தின் பெயர் | புல எண் மற்றும் பரப்பளவு | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | தூத்துக்குடி | பூவாணி கிராமம், லெட்சுமிபுரம் | புல எண் 304/15 விஸ்தீரணம் 0.03.5 ஹெக்டேர். தீர்வை ஏற்பட்ட புன்செய் தரிசு நிலம். | மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரை எண் ஆந7/79492/07, நாள் 9.6.2011. (H1/15674/09) |
| 2. | மதுரை | பாலமேடு | புல எண் 903/50, 60,61 –ல் அரசு புறம்போக்கு நத்தம். | மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரை எண் 75320/10ஆதிந4, நாள் 21.6.2011. (H1/15674/09) |
| 3. | வேலூர் | ஆற்காடு வட்டம், மாங்காடு கிராமம் | ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்ட இடம். | |
| 4. | கரூர் | மண்மங்களம் ஊராட்சி, ராமேஸ்வரப்பட்டி | | |
| 5. | திண்டுக்கல் | எரமநாயக்கன்பட்டி, பழனி தாலுகா | புல எண் 239/1 (0.15 சென்ட்) ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்ட இடங்களில் பொது உபயோகத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் | மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரை எண் 15990/2011/எச்2, நாள் 8.6.2011. (H1/8515/11) |
| 6. | புதுக்கோட்டை | வெள்ளாளவிடுதி, ஆதிதிராவிடர் காலனி, கந்தர்வகோட்டை தாலுகா | | |
| 7. | புதுக்கோட்டை | தொடையூர், ஆதிதிராவிடர் காலனி | | |
| 8. | பெரம்பலூர் | அரும்பாவூர் கிராமம் | | |
| 9. | திருவண்ணாமலை (வணிகவரித்துறை அமைச்சர் அவர்கள் திரு எஸ்.எஸ் கிருஷ்ணமூர்த்தி) | கலசபாக்கம் மேல்வில்வராயநல்லூர் ஊராட்சி | | |
| 10. | நாகப்பட்டினம் (மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் திரு K.A. ஜெயபால்) | திருமருகல் ஒன்றியம் சேகல் ஆதிதிராவிடர் குடியிருப்பு | புல எண் 130/3, 14.5.0 ஏர்ஸ் | |

ஆ.சு. ஜீவரத்தினம்,
அரசு செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.